**IA No.15/2026 in OS No.97/2017**
**Dated : 20.04.2026**

**உத்தரவு**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர் / மூன்றாவது பிரதிவாதியானவர் மீது முதல் எதிர்மனுதாரர் / வாதியானவர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி அசல் வழக்கானது முதல் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் சாட்சிய விசாரணை முடிவுற்று, மனுதாரர் / மூன்றாவது பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இரண்டாவது பிரதிவாதியானவர் எழுதிக்கொடுத்த குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மனு சொத்தில் மனுதாரர் சாகுபடி செய்து அனுபவம் செய்து வருகிறார். மேற்படி மனு சொத்தினை முதல் எதிர்மனுதாரர் / வாதியானவர் சேதாரம் செய்ய முற்பட, அது குறித்து முதல் எதிர்மனுதாரர் / வாதியால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. Tamil Nadu Agricultural Record of Tenancy Act (Thasildar, Kulithalai) மனு கொடுத்து, மனு சொத்திற்கு மனுதாரரே குத்தகைதாரர் என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்மந்தமான ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்வதற்கு அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்களின் நம்பகத்தன்மை மற்றும் சான்றியல் மதிப்பு குறித்து மதிப்பீடு செய்ததற்கு பின்னிட்டு, குறியீடு செய்ய ஆட்சேபணை இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

முதல் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுவினை அனுமதிக்க எவ்வித ஆட்சேபணை இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

முதல் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் 24–வது ஆவணத்தை தவிர ஏனைய ஆவணங்களின் நம்பகத்தன்மை மற்றும் சான்றியல் மதிப்பு குறித்து மதிப்பீடு செய்ததற்கு பின்னிட்டு, குறியீடு செய்ய ஆட்சேபணை இல்லை எனவும், 24–வது ஆவணம் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய இயலாது என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

ஆவணங்களை குறியீடு செய்வதால் மட்டுமே மேற்படி ஆவணங்களுக்கு எவ்வித சட்டவலுவும் ஏற்பட்டுவிடாது.

மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும், நம்பத்தகுந்ததாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்பட போவதில்லை. எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவினை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN

சார்பு நீதிபதி,
குளித்தலை.